**தலைப்பு 274 - அனுராதபுரம் மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன அனுராதபுரம் மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 274 – அனுராதபுரம் மாவட்டச் செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018

யூலை 31 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அனுராதபுரம் மாவட்டச் செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு | 1. | பூரணத்துவமான மற்றும் துல்லியமான வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை. | 2.3.1 |
| | | 2. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை. | 2.11 |
| | | 3. | பெறுகை நடைமுறையினை அமுல்படுத்துவதில் குறைபாடுகள். | 2.4.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 4. | விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள் காணப்படுகின்றமை. | 2.5 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும். | | இணங்காமை | 2.12 |
| 128(ஐ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுங்கு, நேர்மை, ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையாக கவனம் செலுத்தி தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 1. | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்பெறாமை. | 2.3.2(அ) |
| | | 2. | எதிர்பார்க்கப்பட்ட விளைவு அடையப்பெறாமை. | 2.3.2(ஆ) |
| | | 3. | செயற்திட்டங்களினை செயல்படுத்துவதில் தாமதங்கள். | 2.3.2(இ) |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 மாவட்ட செயலக அலுவலகத்தின் முக்கிய தொழிற்பாடுகள்

(i) மாவட்டத்தில் மக்களின் வறுமையை இழிவளவாக்குவதனை ஆரம்பித்துவைத்தல்.

(ii) அபிவிருத்தி செயற்திட்டங்களின் திட்டமிடலும் ஒருங்கிணைப்பும்.

(iii) மாவட்ட செயற்திட்டங்களின் நிர்வாகமும் வழிகாட்டலும்.

(iv) வருமான சேகரிப்பு.

(v) அரச சொத்துக்களின் பாதுகாப்பும் கட்டுப்பாடும்.

(vi) ஆபத்தின்போதான நிவாரண கட்டுப்பாடும் புனரமைப்பு செயற்திட்டங்களும்.

(vii) தேர்தல் செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு.

(viii) உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச மட்டம் மற்றும் கிராமிய மட்டத்திலுள்ள அமைப்புக்களினூடாக அரச செயற்பாடுகளினை ஒருங்கிணைத்தல் மற்றும் சட்டத்தின் மூலம் அங்கீகாரம்பெற்ற செயற்பாடுகளினை நிறைவேற்றுதல்.

(ix) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் முகவராக செயற்படல்.

(x) மாவட்டத்தில் அனைத்து நிர்வாக பணிகளையும் செயற்படுத்தல் மற்றும் மாகாண சபை செயற்பாடுகளுக்கு உதவியளித்தல்.

## 2.2 மாவட்ட செயலக அலுவலகத்தின் கீழுள்ள நிறுவகங்கள் மற்றும் அந்த நிறுவகங்களினால் செயற்படுத்தப்படவேண்டிய தொழிற்பாடுகள்

---

மாவட்ட செயலக அலுவலகத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிறுவகங்கள் மற்றும் அந்த நிறுவகங்களின் பாத்திரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **மாவட்ட செயலக அலுவலகத்தின் கீழுள்ள நிறுவகங்கள்** | **ஸ்தாபிப்பிற்கான அதிகாரம்** | **நிறுவகத்தின் பாத்திரம்** |
|---|---|---|
| **பிரதேச செயலக அலுவலகங்கள்** | | |
| (அ) பதவிய<br>(ஆ) கெப்பெற்றிகொல்லாவ<br>(இ) மதவாச்சி<br>(ஈ) ரம்பெவ<br>(உ) ஹொரவப்பொத்தான<br>(ஊ) ஹலன்பின்டுனுவெவ<br>(எ) ஹகட்டகஸ்டிகிலிய<br>(ஏ) நுவரகம் பலத்த கிழக்கு (என்பீஈ)<br>(ஐ) நாச்சதுவ<br>(ஒ) நுவரகம் பலத்த மத்தி (என்பீசீ)<br>(ஓ) நொச்சியாகம<br>(ஔ) மகாவிலச்சிய<br>(க்) தலவ<br>(கா) கம்புட்டேகம<br>(கி) ராஜாங்கனய<br>(கீ) கல்நெவ<br>(கு) இபலோகம<br>(கூ) திறப்பன<br>(கெ) மிஹிந்தல<br>(கே) பலுகஸ்வெவ<br>(கை) கெகிராவ<br>(கொ) பலகல | 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரப் பரவலாக்கல் சட்டம். | ஒவ்வொரு பிரிவும் அவரின் அதிகாரப்பரப்பாக பிரதேச செயலாளரொருவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் எழுத்து மூலமான சட்டத்தின் மூலம் அவர்க்கு அவ்வாறான பிரதேசத்திற்குள் ஏதேனும் அதிகாரம், கடமை / அல்லது வழங்கியுள்ள தொழிற்பாடுகளினை திணிப்பதற்கு அல்லது ஒதுக்குவதற்காக கையாள்வதற்கு, செயற்படல் மற்றும் நிறைவேற்றுவதற்காக பிரதேச செயலாளர் செயற்படுகின்றார். |

## 2.3 செயலாற்றல்

### 2.3.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாவட்ட செயலகத்திற்கு ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட ஏற்பாடுகளினைப் பயன்படுத்துவதுடன் தொடர்புபட்ட செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்ட செயலகத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட மாவட்ட செயலக அலுவலகம் மற்றும் 22 பிரதேச செயலக அலுவலகங்களினால் எதிர்பார்க்கப்பட்ட 10 பிரதான தொழிற்பாடுகளினை பூர்த்திசெய்யக்கூடிய வழியில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 செயற்பாடுகளினை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினை அடைந்துகொள்ளாமை**

அனுராதபுர மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட 2 பிரதான செயற்பாடுகளின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களினை அமுல்படுத்தும்பொருட்டு 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்கு ரூபா 29 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 20.9 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், அதில் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினை கையகப்படுத்தாமை தொடர்பில் பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | பிரதான செயற்பாடு | கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு | செயலாற்றல் குறிகாட்டியின் பிரகாரம் பௌதீகரீதியில் இலக்கிடப்பட்ட கனியம் | அடையப்பெறாத கனியம் | கைவிடப்பட்ட ஏற்பாடு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | | | ரூபா.மில்லியன் |
| (i) | நகர்த்தக்கூடிய கடைகளின் உற்பத்தி மற்றும் பயனாளிகளுக்கான பகிர்ந்தளிப்பு | 22.3 | 228 (நகர்த்தக்கூடிய கடைகள்) | 15 | 0.97 |
| (ii) | பயனாளிகளுக்கு பால் மாடுகளின் பகிர்ந்தளிப்பு | 6.3 | 59 (பால் மாடுகள்) | - | - |

- 2016 ஆம் ஆண்டின் போது 150 நகர்த்தக்கூடிய கடைகளினை ரூபா 14,657,325 இற்கு அவற்றை கொள்வனவு செய்த பின்னர் பயனாளிகளுக்கிடையே பகிர்ந்தளிப்பது தொடர்பில் 04 பிரதேச செயலக பகுதிகளில் செயற்படுத்தப்பட்ட மாதிரிக் கணக்காய்வுப் பரீட்சிப்பின்போது பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 977,174 தொகை பெறுமதியுடைய 10 நகர்த்தக்கூடிய கடைகள் விளைவற்றதாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

- 2017 ஆம் ஆண்டின் போது 78 நகர்த்தக்கூடிய கடைகளின் தயாரிப்பு மற்றும் விநியோகத்திற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த நகர்த்தக்கூடிய கடைகள் 2018 யூலை 30 இல் உள்ளவாறு பயனாளிகளுக்கிடையே தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

- பால் மாட்டுப் பண்ணை செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் தொடர்பில் இந்த செயற்திட்டத்திற்கு ஏற்பாடுகளினை வழங்கிய அமைச்சினால் அல்லது மாவட்ட செயலகத்தினால் அளவுகோல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் வழிகாட்டல்கள் மற்றும் கையேட்டின் பிரகாரம் பால் மாடு ஒன்றிலிருந்து நாளொன்றுக்கு 15 லீற்றர்கள் பெறப்பட வேண்டிய போதிலும் பிரதேசத்தின் கால்நடை மருத்துவர்களினால் வழங்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் நாளான்றுக்கு அது 07 லீற்றர்களாகக் காணப்பட்டது. ஆனால், மாதிரிப் பரீட்சிப்புக்கு உள்ளாகிய பால் மாடு ஒன்றிலிருந்து நாளொன்றுக்கு பெறப்பட்ட பாலின் தொகுதி 02 லீட்டர்களினை விடக் குறைவாகக் காணப்பட்டது.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை (Outcome) அடைந்து கொள்ளாமை**

----------------------------------------------------------------------------------------------------------------------

(i) கஹடகஸ்டிகிலிய பிரதேச செயலக பிரதேசத்தில் பண்டாரெல்லவ தாங்கியிலிருந்து கொகெம்ப தாங்கிக்கு கால்வாய் வீதியின் நிர்மாண செயற்திட்டத்திற்கு ரூபா 495,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், பூர்த்தியாக்கப்பட்ட வேலைகள் இரண்டு தாங்கிகளும் உயர் மட்டத்தில் அமைந்துள்ளமை மற்றும் கால்வாய் வீதி தாழ்ந்த மட்டத்தில் அமைந்துள்ளமை காரணமாக பண்டாரெல்லவ தாங்கியிலிருந்து கொகெம்ப தாங்கிக்கு நீரினை வடிகட்ட முடியாதிருந்தது.

(ii) நச்சாதுவ பிரதேச செயலக பிரதேசத்தில் ரூபா 426,362 செலவழிப்பதன்மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட சந்திரானிபுர விளையாட்டு மைதானம் மற்றும் ரூபா 601,848 செலவழிப்பதன் மூலம் நிர்மாணிக்கப்பட்ட கடுவெவெ விளையாட்டு மைதானம் விளைவற்றதாகக் தொடர்ந்தும் காணப்பட்டதுடன், விளையாட்டு மைதானங்கள் பயன்படுத்தப்பட்டிருக்காத அதேசமயம் அந்த விளையாட்டு மைதானங்களின் வலை வேலி மற்றும் வாயில் கதவுகள் 2018 ஏப்ரல் 25 வரையிலும் அழிக்கப்பட்டிருந்தது.

**(இ) செயற்திட்டங்களினை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

பலகல பிரதேச செயலக பிரதேசத்தில் மத்தியப்படுத்தப்பட்ட பாதீட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 10 இளைஞர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட பணியை பூர்த்திசெய்வதற்கு இலங்கை போக்குவரத்து சபையின் அனுராதபுர நிலைய முகாமையாளருக்கு ரூபா 100,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. ஆனால், 2018 யூன் 06 இல் உள்ளவாறு சாரதி அனுமதிப்பத்திரத்தினை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காத அதேவேளை அவர்களில் ஒருவர் சாரதி அனுமதிப்பத்திரங்களினை விநியோகிப்பதில் தாமதம் காரணமாக தனிப்பட்ட ரீதியில் பணத்தினைச் செலுத்துவதன் மூலம் சாரதி அனுமதிப்பத்திரமொன்றினை பெற்றிருந்தார். மேலும், தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கிடையே ஒரு நபர் இந்தக் காலப்பகுதியின் போது இறந்திருந்தார்.

### 2.3.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளல்

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தியின் 2030 ஆம் ஆண்டுக்கான ‘‘நிகழ்ச்சிநிரலின்’’ பிரகாரம் அனைத்து பொதுத்துறை நிறுவகங்களும் செயற்பட வேண்டிய அதேசமயம் மீளாய்வாண்டிற்கான அவர்களின் நோக்கெல்லையில் காணப்படும் கடமைகள் தொடர்பில் செயற்படவேண்டிய வழிவகை பற்றி மாவட்ட செயலக அலுவலகம் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 2.3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலக அலுவலகத்தினால் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 150 நாட்கள் காலப்பகுதியின் போது பாராளுமன்றத்தில் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய அந்த அறிக்கைகள் 2018 யூலை 31 இல் வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 பெறுகை நடைமுறையினூடாக விநியோகம் மற்றும் சேவைகளினைப் பெற்றுக்கொள்ளல்

அரச பெறுகை வழிகாட்டலின் பிரகாரம், விநியோகம் மற்றும் சேவைகளினைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 130.5 மில்லியன் தொகையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த அதேவேளை மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலக அலுவலகத்தினால் ரூபா 90.9 மில்லியன் ஏற்பாடுகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

| வாக்குப் பணம் | வாக்குப்பணத்தின் விபரம் | கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்ட தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | **விநியோகம்** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| 1201 | எழுதுகருவிகள் மற்றும் அலுவலக தேவைகள். | 13,001,575 | 12,999,086 | 2,489 |
| 1203 | உணவு, பானங்கள் மற்றும் சீருடைகள். | 72,000 | 44,430 | 27,570 |
| 1302 | இயந்திரங்களும் பொருத்துக்களும். | 2,600,000 | 2,587,875 | 12,265 |
| 1303 | கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள். | 2,062,413 | 1,745,125 | 317,288 |
| 1409 | ஏனையவை. | 20,000,000 | 19,903,712 | 96,288 |
| 2003 | வாகனங்கள். | 1,600,000 | 1,585,040 | 14,960 |
| 2103 | இயந்திரங்களின் கொள்வனவு. | 1,200,000 | 1,097,723 | 102,277 |
| 2104 | கட்டிடங்களின் நிர்மாணம். | 90,000,000 | 50,911,531 | 39,088,469 |
| | **மொத்தம்** | **130,535,988** | **90,874,522** | **39,661,606** |

### 2.4.1 பெறுகை நடைமுறையினை அமுல்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம்ஆண்டிற்கான நகர்த்தக்கூடிய கடைகளினை கொள்வனவு செய்கையில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் அனைத்து தகுதியான விலைமனுதாரர்களின் மாதிரிகள், அழைப்பின் பின்னர் விபரக் குறிப்புரைகளின் பிரகாரம் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், தாழ்ந்த விலை மனுதாரரின் மாதிரி மாத்திரம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் மதிப்பிடப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் விபரக் குறிப்புக்களுடன் அந்த நகர்த்தக்கூடிய கடைகள் இணங்கியிருக்காமையினை பரிந்துரைத்த பின்னர் ஏனைய விலைமனுதாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களுடன் தொடர்புபட்ட மாதிரிகளினை பரீட்சிக்காது விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தது. மேலும், விலைமனு ஆவணங்களின் பிரகாரம் வெளிப்புற உடலினை மறைத்தல், ஜன்னல்கள், நகர்த்தக்கூடிய கடைகளின் தரவுகள் மற்றும் கூரைக்கு 0.47 mm Zink அலுமினியம் வர்ண தட்டையான தாள் (Zink Aluminium Colour Flat Sheet) மற்றும் கடைகளின் வைக்கோல் மெத்தை தரைக்கு 22 mm மரத்திலான பலகை (Timber Plank) பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், மாவட்ட செயலக அலுவலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட நகர்த்தக்கூடிய கடைகளின் தரைக்கு MDF Board பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், கதவுகள், ஜன்னல்கள் மற்றும் அனைத்து

நகர்த்தக்கூடிய கடைகளின் வெளிப்புற உடலினை மறைப்பதற்கு பொதுவாக சந்தையிலுள்ள இரும்பு தட்டையான தாளொன்று பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கெப்பற்றிகொல்லாவ மற்றும் மகாவிலாச்சிய பிரதேச செயலக பிரதேசங்களில் பால் மாடு பண்ணை செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்கு பெறுகை நடைமுறைக்கு புறம்பாக பிரதேச செயலக பகுதியிலுள்ள பால் மாடு பண்ணையொன்றினை நடாத்துகின்ற பண்ணை உரிமையாளரொருவரிடமிருந்து கொள்வனவு செய்த பின்னர் ரூபா 6,268,500 தொகை பெறுமதியுடைய 59 பால் மாடுகள் விநியோகிக்கப்படவிருந்தது. அதேபோல் பால் மாடொன்றிலிருந்து பெறக்கூடிய பாலின் அளவு நாளொன்றுக்கு 2 லீற்றர்களுக்கு குறைவான மட்டத்தில் காணப்பட்டது. ஆனால் கால்நடை மருத்துவர்களின் பரிந்துரைகளின் பிரகாரம் நாளொன்றுக்கு ஆகக்குறைந்தது 7 லீற்றர்கள் அளவுள்ள பால் பெறக்கூடியதாகவுள்ள பால் மாடுகள் விநியோகிக்கப்பட்டிருக்க வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலக அலுவலகத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வு பரீட்சிப்பின் போது பின்வரும் உண்மைகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) அரச உடமையைக்கொண்டுள்ள சொத்துக்களினை அதிஉத்தம வினைத்திறனுடன் பயன்படுத்தாமை

(i) 2015 ஆம் ஆண்டின் போது மாவட்ட செயலக அலுவலக வளாகத்தில் வாகனங்களினை பழுதுபார்ப்பதற்கான நிலையமொன்றினை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,164,028 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. ஆனால், நிர்மாணிக்கப்பட்ட பழுதுபார்க்கும் நிலையம் திட்டமிடல் மற்றும் பொருத்துவதிலுள்ள குறைபாடுகள் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வாகனங்களினை பழுதுபார்க்க அல்லது வாகனங்களினை கழுவுவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) இப்லோகம மற்றும் தம்புட்டேகம பிரதேச செயலகங்களிலுள்ள பயனாளிகளின் வாழ்வாதார வழிமுறைமையினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு திவிநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு 2017 திசெம்பர் 31 வரையிலும் பகிர்ந்தளிக்கப்பட்டிராது களஞ்சியத்தில் விளைவற்றதாக ரூபா 4,530,951 தொகையொன்று பெறுமதியான 12,152 பயிர்ச்செய்கை உபகரணங்கள் தொடர்ந்தும் காணப்பட்டிருந்தது.

### (ஆ) சொத்துக்களிலிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற வருமானத்தினை ஒதுக்கீடு செய்யாமை

கிராம சேவையாளர் பிரதேசத்தினால் கெக்கிராவ பிரதேச செயலகத்தின் கீலிபுளியங்குள கிராமத்திலுள்ள ஹீன் ஓயா கால்வாயில் அனுமதியற்ற மணல் தொழிலாளர்களுக்கு நன்மைகளினை வழங்கியிருந்தமைக்கு முறையான

நடவடிக்கைகளினை எடுத்திராமை காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 812,500 தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. தாபனக்கோவையின் XLVII அத்தியாயத்தின் முதல் பட்டியலின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த சம்பவம் தொடர்பில் முறையானதொரு ஒழுக்காற்று பரீட்சிப்பு நடாத்தப்பட்டிருக்கவேண்டிய போதிலும், இது 2018 யூன் 30 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2016 ஆம் ஆண்டின் போது மத்தியப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் ஏற்பாடுகளினால் கெக்கிராவயிலுள்ள பிரதேச செயலகத்திலுள்ள பிரதான வீதி மதுரங்கடவெல விலாசத்தில் அமைந்துள்ள கெக்கிராவ நலன்புரி கழகத்திற்கு ரூபா 500,000 பெறுமதியான நானாவிதமான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், பௌதீக பரீட்சிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் போது மேற்குறித்த விலாசத்தில் அல்லது ஏதேனும் இடத்தில் அவ்வாறானதொரு கழகத்தினை கண்டறிய முடியாதிருந்தது.

## 2.7 நிதிசார் முறையற்ற தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அனுராதபுர மாவட்டத்திலுள்ள நுவரகம் பலத்த கிழக்கு பிரதேச செயலகத்தினால் 2013 சனவரியிலிருந்து 2017 திசெம்பர் வரையான காலப்பகுதியுடன் தொடர்புடைய சிரேஷ்ட பிரஜைகள் படிகளினை செலுத்துவதற்கு தபால்மா அதிபருக்கு ரூபா 58.47 மில்லியன் பெறுமதியான பணம் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால், பயனாளிகள் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 2.33 மில்லியன் தொகையான பணமொன்று பதிவுத்தபாலினூடாக காசுக் கட்டளைகள் மூலம் பிரதேச செயலகத்திற்கு திருப்பியனுப்பப்பட்டிருந்தது. பிரதேச செயலக அலுவலகத்தின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் அவற்றை பதிந்திராது பணத்தை பெற்று தவறாகப் பயன்படுத்தியிருந்ததுடன் அந்த காசுக்கட்டளைகளினை விடய எழுதுவினைஞர்கள் (Subject Clerk) மாற்றஞ்செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.8 கடமைகளினை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தினால் கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகளின் பயன்படுத்துகை

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் மேற்குறித்த விபரங்களுடன தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமொன்றாகச் சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 626.22 | 625.42 | 0.80 | 0.13 |
| | மூலதனம் | 39.42 | 38.65 | 0.77 | 1.95 |
| | **மொத்தம்** | **665.64** | **664.07** | **1.57** | **0.24** |
| 2014 | மீண்டெழுபவை | 606.19 | 605.25 | 0.94 | 0.15 |
| | மூலதனம் | 415.18 | 411.48 | 3.70 | 0.89 |
| | **மொத்தம்** | **1,021.37** | **1,016.73** | **4.64** | **0.45** |
| 2015 | மீண்டெழுபவை | 776.10 | 773.74 | 2.36 | 0.30 |
| | மூலதனம் | 80.00 | 53.23 | 26.77 | 33.46 |
| | **மொத்தம்** | **856.10** | **826.97** | **29.13** | **3.40** |
| 2016 | மீண்டெழுபவை | 806.06 | 801.47 | 4.59 | 0.56 |
| | மூலதனம் | 69.20 | 66.75 | 2.45 | 3.54 |
| | **மொத்தம்** | **875.26** | **868.22** | **7.04** | **0.80** |
| 2017 | மீண்டெழுபவை | 810.79 | 799.87 | 10.92 | 1.35 |
| | மூலதனம் | 124.56 | 85.17 | 39.39 | 31.62 |
| | **மொத்தம்** | **935.35** | **885.04** | **50.31** | **5.37** |

மேற்குறித்த விபரங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகளினைப் பயன்படுத்தாமை**

மீளாய்வாண்டின் போது கட்டிடங்களின் நிர்மாணத்திற்கு மாவட்ட செயலகத்தினால் திட்டங்களினை தயாரித்த பின்னர் ரூபா 90 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்த ஏற்பாடுகளில் ரூபா 39 மில்லியன் அல்லது 43 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை ஏற்பாடுகள் கிடைக்கக்கூடியதாகச் செய்தமை**

06 வாக்குப் பணங்களுக்கு மிகை ஏற்பாடுகள் கிடைக்கக்கூடியதாகச் செய்தமை காரணமாக மீளாய்வாண்டின் போது ஏனைய வாக்குப் பணங்களுக்கு ஏற்பாடுகள் மாற்றஞ்செய்யப்பட்டிருந்தது. ஏனைய வாக்குப்

பணங்களுக்கு மாற்றஞ்செய்யப்பட்ட அந்த ஏற்பாடுகள் தேறிய ஏற்பாடுகளின் 49 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டிருந்தது.

**(இ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளினைப் பயன்படுத்தல்**

---

பல்வேறு செயற்பாடுகளுக்கு 25 அமைச்சுக்கள், 17 திணைக்களங்கள் மற்றும் 02 அலுவலகங்களினால் மாவட்ட செயலக அலுவலகத்திற்கு முறையே ரூபா 4,475.7 மில்லியன், ரூபா 100.8 மில்லியன் மற்றும் ரூபா 39.1 மில்லியன் தொகைகள் உள்ளடங்கலாக ரூபா 4,615.7 மில்லியன் கூட்டுத்தொகையான ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. மாவட்ட செயலக அலுவலகத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளில், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 3,773 மில்லியன் ஏற்பாடுகள் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டமை காரணமாக ரூபா 843 மில்லியன் பெறுமதியுடைய 18 சதவீத ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்புக்களின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெறப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் 08 அமைச்சுக்கள் மற்றும் 02 திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தேறிய ஏற்பாடுகளில் 10 சதவீதம் தொடக்கம் 85 சதவீதம் வரையான ஏற்பாடுகள் திருப்பியனுப்பப்பட்டது.

(ii) 2017 ஆம் ஆண்டின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 347 மில்லியன் ஏற்பாடுகளினூடாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 326.36 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் பயன்படுத்தாமை காரணமாக ரூபா 20.64 மில்லியன் சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டிருந்தது.

(iii) 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சிறிய முயற்சியாண்மைகள் அபிவிருத்தி அலகுகளின் சிறிய வியாபாரங்களின் அபிவிருத்திக்கு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சினால் மீளாய்வாண்டின் போது ரூபா 2.2 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ரூபா 1.1 மில்லியன் மொத்த தொகையொன்று பயன்படுத்தப்பட்டிருந்த அதேசமயம் 2017 ஆம் ஆண்டின் போது மொத்த ஏற்பாடுகளின் 50 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) சிறிய முயற்சியாண்மைகள் அபிவிருத்தி அலகின் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பொது நிகழ்ச்சித்திட்டங்கள், சலூன் (Saloon) நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சிவசக்தி கடன்களுடன் தொடர்புடைய 16 செயற்திட்டங்களுக்கு ரூபா 990,420 தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலக அலுவலகத்துடன் தொடர்புடைய 27401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்கு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 75 | 74 | 49 | 50 | 230 | 195 |

மேற்குறித்த விபரங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 09 பிரதேச செயலக அலுவலகங்களுடன் தொடர்புபட்ட இடைநிறுத்தப்பட்டிருந்த 10 உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாகவுள்ள கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,537,711 ஆகக் காணப்பட்டதுடன் அந்த மீதியில், 05 உத்தியோகத்தர்களுடன் தொடர்புபட்ட ரூபா 966,475 கடன் மீதிகள் தொகையொன்று 05 வருடங்களினை விடவும் பழமைவாய்ந்த நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) இராஜாங்கன பிரதேச செயலக அலுவலகத்திலிருந்து தம்புட்டேகம பிரதேச செயலக அலுவலகத்திற்கு இடமாற்றப்பட்டிருந்த கிராம சேவகர் ஒருவரிடமிருந்து 05 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கும் மேலாக நிலுவையாகவுள்ள ரூபா 26,613 மொத்தக் கடன் மீதிகளினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 பொதுவைப்புக்கள் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 6,172,784 கூட்டுத்தொகையினையுடைய 02 வருடங்களினை விட பழமைவாய்ந்த (காணி வைப்புக்கள் தவிர) 05 வைப்புக் கணக்குகளின்மீது நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இபலோகம பிரதேச செயலக அலுவலகத்தின் சேனபுர நெற்களஞ்சியத்தை திருத்தும் பொருட்டு நெல் விற்பனை சபையினால் வழங்கப்பட்ட பணத்திலிருந்து

ரூபா 123,271 மீதி தொகைக்கு நெல் விற்பனை சபைக்கு புதிய மதிப்பீட்டிற்கான அங்கீகாரத்தினைப் பெறும்வரை திருப்பி அனுப்பியிராது பொது வைப்புக் கணக்கில் அது நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(இ) நொச்சியாகம பிரதேச செயலக அலுவலகத்தில் ரூபா 90,369 தொகையான காலங்கடந்த வைப்புக்களாக இனங்காணப்பட்ட மற்றும் 2 வருடங்களினை விட பழமைவாய்ந்த வைப்புக் கணக்கிலுள்ள பிடிகாசினை விடுவிப்பதற்கு மற்றும் அரச வருமானத்திற்கு இனங்காண்பதற்கு நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

2015 மார்ச் 16 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் பிரகாரம், முதியோர் படிகளின் செலுத்துகைகளுடன் தொடர்புபட்ட பேணப்பட வேண்டிய செலுத்தப்படாத முதியோர் படிகள் பதிவேடு, படிகள் செலுத்துகை பேரேடு, மாதாந்த பொழிப்பாக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் காத்திருக்கும் பதிவேடு 04 பிரதேச செயலக அலுவலகங்களினால் பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.12 இணங்காமைகள்

### 2.12.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா. | இணங்காமை |
|---|---|---|---|
| (i) | 2016 மார்ச் 03 ஆந் திகதிய மற்றும் 1/9/2/18 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மான கடிதம் | 18,518,095 | நிர்மாண தொழிற்துறை அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்டிராத 4 சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களுக்கு ரம்பெவ பிரதேச செயலக அலுவலகத்தின் 61 நிர்மாண அபிவிருத்தி செயற்திட்டங்கள் வழங்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 103(1), 104(1), 105(1) மற்றும் 128 ஆம் இலக்க நிதிப்பிரமாணம் | பெறுமதி இனங்காண ப்படவில்லை | சொத்துக்களின் பாதுகாப்பிற்கு நடவடிக்கைகள் எடுத்திராது கூரையினை அகற்றியமை காரணமாக திருத்துகையில் நுவரகம் பலத மத்திய (என்பிசி) பிரதேச செயலக அலுவலகத்தின் 22 அலுவலக உபகரணங்களுக்கு சேதங்கள் ஏற்பட்டிருந்தது. சேதங்களின் பெறுமதி இனங்காணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2017 சனவரி 11 ஆந் திகதிய MNPEA/02/2017 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் சுற்றறிக்கை | 18,518,095 | ரம்பெவ பிரதேச செயலக அலுவலகத்தின் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 08 மூலக்கூறுகளுக்கு மொத்தமாக ஒதுக்கப்பட்டவற்றிருந்து உட்கட்டமைப்பு வசதிகளினை அபிவிருத்தி செய்வதற்கு இனங்காணப்பட்ட 03 மூலக்கூறுகளின் மீது மாத்திரம் அது செலவிடப்பட்டிருந்தது. மேற்குறித்த காரணமாக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார சந்தர்ப்பங்களின் அபிவிருத்தி, கிராமிய மக்களின் பொருளாதார நிலைமையின் அபிவிருத்தி, இளைஞர் மற்றும் யுவதிகளுக்கிடையே சுயதொழில் வாய்ப்பின் உருவாக்கம் போன்ற மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | திவிநெகும பணிப்பாளர் நாயகத்தின் 2017/06 ஆம் இலக்க மற்றும் 2016/03 ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | 1,287,500 | திவிநெகும சிப்டோரா (Sipdora) புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய புலமைப்பரிசில் நிதிகள் உடனடியாக செலுத்தப்படவேண்டிய போதிலும் தலவ மற்றும் நொச்சியாகம பிரதேச செயலக அலுவலகங்களின் புலமைப்பரிசில் படிகள் 01 மாதம் தொடக்கம் 18 மாதங்கள் வரையான தாமதமொன்றுடன் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (v) | திவிநெகும பணிப்பாளர் நாயகத்தின் 2016/05 ஆம் இலக்க சுற்றறிக்கை | 3,681,000 | சமூக பாதுகாப்பின் பயனாளியின் இறப்பொன்றின் இறுதிச்சடங்கு முடிவடைவதற்கு முன்னர் பயன்கள் உடனடியாக செலுத்தப்பட வேண்டிய போதிலும் 04 பிரதேச செயலக அலுவலகங்களுடன் தொடர்புடைய 254 பயனாளிகளுக்கு பலன்களினை செலுத்துவதில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் காணப்பட்டிருந்தது. |

## 2.13 மனித வள முகாமைத்துவம்

### 2.13.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் தனிநபர் ஊதியங்கள்

மேற்குறித்த 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட கடமைகளினை பூர்த்தியாக்குவதற்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமாகவுள்ள பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கு மாவட்ட செயலக அலுவலகத்தினால் தனிநபர் ஊதியங்களுக்கு ரூபா 710.07 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, தலா மூலதனச் செலவினம் ரூபா 332,241 ஆகக் காணப்பட்டிருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| i. | சிரேஷ்ட மட்டம் | 107 | 77 | 30 |
| ii. | மூன்றாம் மட்டம் | 54 | 20 | 34 |
| iii. | இரண்டாம் மட்டம் | 2,329 | 1,854 | 475 |
| iv. | ஆரம்ப மட்டம் | 221 | 186 | 35 |
| | **மொத்தம்** | **2,711** | **2,137** | **574** |